10 பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

296. அடுத்துவரும் தேர்தல் நடைபெறும் தேதி முதற் கொண்டு செயலுக்கு வரும் வகையில் மதுரை மாநகராட்சியை அறுபத்தைந்து வார்டுகளாகப் பிரிப்பது குறித்து ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ஆம் தேதி இடப் பெற்ற 1612-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

297. நிலக் கடலை, எள், நெல், எல்லா வடிவங்களிலுமான கரும்பு வெல்லம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், தென் னாற்காடு மாவட்டம் அவலூர்பேட்டை அங்காடிப் பகுதியை அறிவிக்கப் பெற்ற ஒரு அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்த, வேளாண்மைத் துறையின் 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் தேதியிடப் பெற்ற 105 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

89. உடுக்குறியிடாத வினா-விடைப் பட்டியல் (276 முதல் 295 வரை).